**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,மேட்டூர்**
முன்னிலை: நா.கோபாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

2026–ம் ஆண்டு மார்ச் 10ம் நாள் செவ்வாய்கிழமை

**பி.ஆர்.சி. எண்.107/2025**
----------

அரசுக்காக : காவல் ஆய்வாளர்,
கொளத்தூர் காவல் நிலையம்,
குற்ற எண்.317/2025 .....குற்றமுறையிடுபவர்/ புகார்தாரர்

/எதிர்/

பிரபாகரன் (29), த/பெ.நாச்சிமுத்து
பெரியதண்டா, சின்னதண்டா அஞ்சல்,
கொளத்தூர், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம். ...... எதிரி

இந்த வழக்கானது **10.03.2025**–ம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும், எதிரி தரப்பில் திரு.**K.**தேவராஜ் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசோதனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. **அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :** இவ்வழக்கின் புகார்தாரரான நல்லதம்பி என்பவர் கொளத்தூர் கிராமம், ஊராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வந்துள்ளார். இவ்வழக்கின் எதிரியானவர் கொளத்தூர், பெரியதண்டாவை சேர்ந்தவர். இந்நிலையில் கடந்த 03.08.2025ம் தேதி எதிரியானவர் ஆடிப்பெருக்கு பண்டிகை என்பதால் மது குடித்துவிட்டு அவரது பெற்றோரிடம் தகராறு செய்துள்ளார். அன்று இரவு நீண்ட நேரம் எதிரியானவர் பெற்றோரிடம் பிரச்சனை செய்து வந்ததால், அவரை ஒழுங்காக படுத்து தூங்கும்படி அவரது பெற்றோர் திட்டியுள்ளனர். அதை கேட்காமல் குடிப்போதையில் இருந்த எதிரி பிரபாகரனுக்கும் அவரது பெற்றோருக்கும் மீண்டும் வாக்குவாதம் ஆகி பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் குடிபோதையில் இருந்த எதிரியானவர் அதே

தினம் இரவு 10.30 மணியளவில் அவரது பெற்றோரிடம் வாய்த்தகாரறு செய்து கொண்டு, அருகில் இருந்த சாட்சிகள் அண்ணாதுரை, ரவி, ரஞ்சித் ஆகியோர் சொல்லியும் கேட்காமல், பொதுச் சொத்துக்களான அரசு சொத்துக்களுக்கு சேதாரம் ஏற்படுத்த வேண்டும் என்ற தீய நோக்கத்துடன் வேண்டுமென்று தெரிந்தே, அவரது வீட்டின் அருகில் உள்ள இலக்கம்பட்டி ஊராட்சி மன்ற அரசு அலுவலகத்தின் கதவு மற்றும் ஜன்னல்களை செங்கற்கள் மூலம் அடித்து உதைத்தும், ஹலோ பிரிக்ஸ் கல்லை அலுவலகத்திற்குள் வீசி எறிந்து சுமார் ரூபாய்.27000/- மதிப்புள்ள அரசுக்கு சொந்தமான பொருள்களை உடைத்து, தவறான இழப்பு மற்றும் சேதத்தை ஏற்படுத்தி. சொத்தழிப்பு செய்துள்ளார். எனவே எதிரியானவர் சட்டப்பிரிவு **3(1) of TamilNadu Public Property Prevention of Damage of Loss Act 1992**-ன்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றத்தை புரிந்தவராகிறார். இறுதியாக மேட்டுர் காவல் ஆய்வாளர் **சட்டப்பிரிவு 3(1) of TamilNadu Public Property Prevention of Damage of Loss Act 1992-ன்** கீழ் குற்ற இறுதி அறிக்கை கடந்த **28.09.2025 -ம்** தேதி தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி தாக்கல் செய்யப்பட்ட இறுதியறிக்கையின் அடிப்படையில் இந்த நீதிமன்றம் எதிரிக்கு எதிராக **சட்டப்பிரிவு 3(1) of TamilNadu Public Property Prevention of Damage of Loss Act 1992**-ன் குற்றத்திற்கு போதுமான அடிப்படை முகாந்திரங்கள் இருப்பதாக குற்றங்களை புலன்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.
3. மேற்படி அழைப்பாணையின் பேரில் எதிரி ஆஜரானவுடன் எதிரிக்கு குற்றமுறையிடுபவர் தரப்பு ஆவணங்களின் நகல்கள் **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 230**-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பேரில் ஏற்பட்ட குற்ற வழக்கானது மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கது என்பதால் வழக்காவணங்களை மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்புகை செய்து **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு** 232(அ)-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

a) இவ்வழக்கின் எதிரி பிணையில் இருந்து வருவதால் தொடர்ந்து விசாரணைக்

காலங்களிலும் அவ்வாறே இருந்து வர **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 232 (ஆ)** –ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

b) இவ்வழக்கின் சொத்துக்களை (C.P.148/2025) மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 232 (இ)** –ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

c) இவ்வழக்கின் விசாரணையைத் தொடர்ந்து மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேற்கொள்ள சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞருக்கு அறிவிப்பு அனுப்ப **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 232 (ஈ)** –ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

d) எதிரி வழக்கு விசாரணையின் போது வழக்கறிஞர் வைத்துக் கொண்டுள்ளார்கள். அமர்வு நீதிமன்ற விசாரணையின் போது வழக்கறிஞர் வைத்துக்கொள்ள வசதி உண்டா என்று வினவியபோது எதிரி வசதி உண்டு என்று தெரிவித்தார். எதிரியை இவ்வழக்கு விசாரணையின் பொருட்டு மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், சேலத்தில் **10.04.2026–ம்** தேதியன்று ஆஜர்படுத்துமாறு உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு **10.03.2026–ம்** தேதியன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**